

ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 3 | ஜூலை 1998 | கானம் : 12

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 3 ஜுலை 1998 கானம் : 12

## விஷய ஸூசிகை

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 32 | 5 |
| 3. | வேணு கீதம் | 7 |
| 4. | பாகவத தேன்துளிகள் | 9 |
| 5. | நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 13 | 11 |
| 6. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 13 |
| 7. | வேத கதைகள் - 14 | 15 |
| 8. | எந்தரோ மஹானுபாவுலு - 2 | 17 |
| 9. | நமது சிந்தனைக்கு | 20 |
| 10. | ஹாத்திராம் பாபா | 23 |
| 11. | பாலகர்களுக்கு ஒரு கதை - 9 | 25 |
| 12. | திருஅரிமேய விண்ணகரம் | 28 |
| 13. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 35 | 30 |
| 14. | செய்திகள் | 32 |
| 15. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |



ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : அஸாவேரி தாளம் : ஆதி

பல்லவி

*கருணாமூர்த்தி நீயல்லவோ கண்ணா*
*சரண் என்று வந்தோரை அரணாய் ரக்ஷிக்கும் (கருணா)*

சரணம்

*நாவற்பழம் கொண்டு நவரத்னம் ஈந்தாய்*
*நஞ்சூட்டியவளுக்கும் நற்கதி தந்தாய்*
*அஞ்சி நின்ற பார்த்தனுக்கு அபயம் அளித்தாய்*
*தஞ்சமடைந்தேன் உனையே முரளீதரன் நானே (கருணா)*

அறிவிப்பு : 1. பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் ''அருணாசல அக்ஷரமணமாலை'' ஸ்ரீ ஸ்வாமிகளின் உபன்யாஸ கேஸட்டுகள் - மூன்று பாகங்கள் வெளிவந்துள்ளன.

2. 'மதுரமுரளி' இரண்டாண்டு இதழ்கள், (July '95 - July'97) இரண்டு பாகங்களில் Bind செய்யப்பட்டு வெளி வந்துள்ளன.

3. 'மதுரமுரளி' மூன்றாம் ஆண்டு இதழ்கள் 'August '97 - July '98' தனி பாகமாக வெளி வர உள்ளது.

இவை சென்னை ப்ரேமிக பவனத்தில் கிடைக்கும்.



ஜூன் மாதம், பெங்களூரில் நடைபெற்ற ஸ்ரீமத் பாகவத 'ஸப்தாஹ ஸதக்ருது'
வைபவ நிகழ்ச்சிகளில் நம் ஸ்வாமிகள். ப்ரம்ஹஸ்ரீ முல்லைவாசல்
க்ருஷ்ணமூர்த்தி ஶாஸ்த்ரிகளும், காஞ்சி ஆசார்யாள் ஜயந்தி ஸபா
டிரஸ்டைச் சேர்ந்த ஸ்ரீமான் மூர்த்தி அவர்களும் உடன் உள்ளனர்.

32

நம் ஸ்வாமிகள் ஒரு ஸமயம், ப்ரவசனத்திற்காக பெங்களூர் சென்றிருந்தார். அப்பொழுது தன்னுடைய ப்ரவசனத்தில் "திருப்பதி ஸ்ரீநிவாஸன் தனத்தினால் ஆராதிப்பதனாலும், திருச்சூரில் உள்ள வடக்குத்தப்பன் வெடியினால் (அதிர்வேட்டு) ஆராதிப்பதனாலும், பத்ரிகாஶ்ரமத்தில் உள்ள பத்ரிநாராயணன் ப்ரஹ்மசர்யத்தினால் ஆராதிப்பதனாலும், குருவாயூரில் உள்ள குருவாயூரப்பன் பாகவத ஸப்தாஹ ஆராதனத்தினாலும் ப்ரீதி அடைகின்றார்கள்" என்று கூறினார். மேலும், தமக்கு வாழ்நாளில் குருவாயூரப்பனுடைய ப்ரீதிக்காக ஒரு ஸ்ரீமத் பாகவத 'ஸப்தாஹ ஸதக்ருது' நடத்திப் பார்க்கவேண்டும் என்ற ஆசை உள்ளதாகவும் ஸ்வாமிகள் தெரிவித்தார். உடனே ஸ்ரீமான் மூர்த்தி அவர்கள், அப்படி ஒரு ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ ஸதக்ருது யஜ்ஞத்தை பெங்களூரிலேயே நடத்தி விடலாம் என்று உத்ஸாஹமாக அபிப்ராயம் தெரிவித்தார்.

பெங்களூரில் காஞ்சி ஆசார்யாள் ஜயந்தி ஸபா டிரஸ்டு மூலம் இந்த யஜ்ஞத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டது. மேலும், இது பரமஹம்ஸ ஸம்ஹிதையாக இருப்பதாலும், காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளுக்கு இதில் அலாதி ப்ரியம் இருப்பதாலும், அவருடைய 105-வது ஜயந்தி மஹோத்ஸவத்தை முன்னிட்டு, இந்த மஹா யஜ்ஞத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டு, இந்த வருடம் ஜூன் 3-ஆம் தேதி முதல் 9-ஆம் தேதி வரை பெங்களூர் மல்லேஶ்வரத்தில் உள்ள காஞ்சி காமகோடி ஶங்கர மடத்தில் விமரிசையாக நடந்தேறியது. இதற்கு முன்பு இப்படி ஒரு பாகவத ஸப்தாஹ ஸதக்ருது யஜ்ஞம் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு ஸுகப்ரும்மம் அவர்களால் சென்னை ஹேமமாலினி கல்யாண மண்டபத்தில் நடத்தப்பட்டது என்றும், அதில் ஸ்ரீ புருஷோத்தம கோஸ்வாமி அவர்களும் ஸ்வாமி ஹரிதாஸ் கிரி அவர்களும் கலந்து கொண்டதாக தெரிய வருகின்றது.

ஜூன் 2-ஆம் தேதி அன்றே ஶங்கர மடம் மங்களகரமாக அலங்கரிக்கப்பட்டது. அன்று காலையிலேயே ஸப்த புண்ய நதிகளில் இருந்து கொண்டு வரப்பட்ட தீர்த்தங்கள் கலஶங்களில் சேர்க்கப்பட்டு "கட ஸ்தாபனம்" செய்யப்பட்டது. ஸ்ரீ ஸுகர், ஸ்ரீ வ்யாஸர், பாமா, ருக்மிணி ஸமேத கோபால க்ருஷ்ண ஸ்வாமிகள், கடங்களில் ஆவாஹனம் செய்யப்பட்டனர்.

மேடையில் 108 க்ருஷ்ண விக்ரகங்கள் அழகாக அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டன. அன்று காலையிலேயே ஸ்ரீமத் பாகவத மாஹாத்மியமும் படனம் செய்யப்பட்டது. எல்லோருக்கும், ''108 பாகவத பாராயணம் நன்றாக செய்யக்கூடியவர்கள் ஒரே சமயத்தில் கலந்து கொள்வார்களா?'' என்ற ஐயம் இருந்து வந்தது. ஆனால், எல்லோரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தும் விதமாக 117 பாகவதோத்தமர்கள் வந்து சேர்ந்து விட்டனர்.

3-ஆம் தேதி காலை 6.00 மணிக்கு ஆசார்ய வந்தனத்துடன் ஸப்தாஹ பாராயணம் ஆரம்பிக்கப்பட்டது. மதியம் சுமார் 12.00 மணிவரை பாராயணம் நடைபெற்றது. எல்லோரும் சேர்ந்து பாவத்துடன் பாராயணம் செய்வதைக் கேட்கும்பொழுது மிகவும் ரம்யமாக இருந்தது. மதியம் 2.00 மணி முதல் 4.00 மணி வரை ஸத்ஸங்கமும் மாலை 6.00 மணி முதல் 6.30 மணி வரை ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணமும் நடைபெற்றன. மாலை 6.30 மணி முதல் 8.30 மணி வரை சேங்காலிபுரம் ப்ரஹ்மஸ்ரீ கல்யாணராம பட்டாச்சாரியர் அவர்களின் பாகவத ஸப்தாஹ உபன்யாஸம் நடைபெற்றது. இரவு 8.30 மணி முதல் 10.30 மணி வரை செதலபதி ஸௌந்தரராஜ பாகவதரின் திவ்யநாமம் நடைபெற்றது. ஏகாதஸீ அன்று, ஸ்ரீமான்கள் க்ருபாகர ஸர்மா, நீலபால ஸர்மா, முல்லைவாசல் க்ருஷ்ணமூர்த்தி ஸாஸ்த்ரிகள் மற்றும் பல வித்வான்களின் ப்ரவசனமும் நடைபெற்றன. இந்த ஏழு நாட்களும் காலை முதல் இரவு வரை அனைவருக்கும் பகவத் விஷயமாகவே இருந்து வந்தது.

ஸப்தாஹ யஜ்ஞத்தின் அங்கமாக கோ தானம், பூ தானம், பீஜ தானம் இவைகள் எல்லாம் பெரிய அளவில் செய்யப்பட்டன. கலந்து கொண்ட பாகவதோத்தமர்கள் அனைவருக்கும் ஸ்ரீமத் பாகவத க்ரந்தம், ஜப மாலை, ஆசனம், ஸரஸ்வதி பீடம், நாம வஸ்த்ரம் போன்றவைகள் ஸமர்ப்பிக்கப்பட்டன.

பூர்த்தி அன்று காலையில் உஞ்சிவ்ருத்தியும், பாகவத ஸம்ப்ரதாயப்படி ராதா கல்யாணமும் நடைபெற்றன. இந்த ஸப்தாஹ ஸதக்ருதுவில் கலந்து கொள்ள பல ஊர்களில் இருந்தும் பக்த ஜனங்கள் திரளாக வந்திருந்தனர். தன்னுடைய அனுக்ரஹபாஷனத்தில் நம் ஸ்வாமிகள், ''மகத்தான புண்ணிய பலத்தினால்தான் இது மாதிரியான வைபவங்களில் கலந்து கொள்ளக்கூடிய பாக்யம் கிடைக்கிறது என்றும், இதில் எவ்விதத்திலாவது சம்பந்தப்பட்டவர்கள் உட்பட எல்லோருக்கும் ஸர்வ மங்களமும் உண்டாகும்'' என அனுக்ரஹித்தார்கள்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# வேணு கீதம்

## கோப்ய ஊசு:

அக்ஷண்வதாம் பலமிதம் ந பரம் வாதாம:
ஸக்ய: பஶூனனு விவேஶயதோர் வயஸ்யை: ।
வக்த்ரம் வ்ரஜேஶ ஸுதயோரநுவேணுஜுஷ்டம்
யைர்வா நிபீதமனுரக்த கடாக்ஷமோக்ஷம் ॥ 1

ஹே தோழிமார்களே! சிநேகிதர்களுடன் பசுக்களை காட்டில் ஓட்டிச் செல்கின்றவர்களான நந்தகோப குமாரர்களான பலராம க்ருஷ்ணர்களுடைய புல்லாங்குழலால் ஸேவிக்கப்பட்டதும் அன்புவாய்ந்த கடைக்கண் பார்வையுடையதுமான திருமுகமானது எவர்களால் பார்க்கப்பட்டதோ, கண் படைத்த அவர்களுக்கு இதுதான் மேலான ப்ரயோஜனம். இதைக் காட்டிலும் சிறந்ததான ப்ரயோஜனத்தை நாமறியவில்லை.

சூத ப்ரவால பர்ஹஸ்தபகாத்பலாப்ஜ-
மாலாநுப்ருக்த பரிதாந விசித்ர வேஷௌ ।
மத்யே விரேஜதுரலம் பஶுபால கோஷ்ட்யாம்
ரங்கே யதா நடவரௌ க்வ ச காயமானௌ ॥ 2

சில ஸமயங்களில் மாந்தளிர், மயில் தோகை, பூங்கொத்துகள், நீலத்தாமரை மாலைகள், செந்தாமரை மாலைகள் இவைகளுடன் கூடின பீதாம்பரம், நீலப்பட்டு இவைகளால் விசித்ரமான வேஷங்களையுடைய அவர்கள் கோபாலர்களுடைய ஸபையின் நடுவில் பாடுகின்றவர்களாய் நாடக மேடையில் சிறந்த நடர்கள்போல உவமையில்லாதபடி விளங்கினார்கள்.

கோப்ய: கிமாசரதயம் குஶலம் ஸ்மவேணு:
தாமோதராதரஸுதாமபி கோபிகாநாம் ।
புங்க்தே ஸ்வயம் யதவஶிஷ்டரஸம் ஹ்ரதின்யோ
ஹ்ருஷ்யத்வசோऽஶ்ரு முமுசுஸ்தரவோ யதா(ஆ)ர்யா: ॥ 3

ஹே கோபிகளே! இந்த வேணுவானது என்ன புண்ணியம் செய்ததோ? ஏனென்றால், கோபஸ்த்ரீகள் மட்டும் அனுபவிக்கத் தகுந்ததான ஸ்ரீ க்ருஷ்ணனுடைய அதராம்ருதத்தை வேணுவானது ரஸம் மட்டும் மீதியிருக்கும்படி தன்னிஷ்டம் போல அனுபவிக்கிறது. குலவிருத்தர்கள், தங்கள் குலத்தில் பிறந்த பகவத் பக்தனைப் பார்த்து

ஸந்தோஷித்து ஆனந்தக் கண்ணீர் விடுவதுபோல நதிகள் (தங்கள் ஜலத்தால் வளர்ந்த மூங்கிலிலிருந்து உண்டான அந்த பகவானுடைய வேணுவைப் பார்த்து தாமரை மலர்கள் புஷ்பிக்கிறது என்ற வ்யாஜத்தால்) மயிர் சிலிர்த்தன. மரங்கள் (தேனைப் பெருக விடுகிறது என்ற வ்யாஜத்தால்) ஆனந்தக் கண்ணீரை பெருகவிட்டன.

**ப்ருந்தாவனம் ஸகி புவோ விதநோதி கீர்திம்**
**யத் தேவகீஸுத பதாம்புஜ லப்த லக்ஷ்மி ।**
**கோவிந்த வேணுமனு மத்த மயூரந்ருத்யம்**
**ப்ரேக்ஷ்யாத்ரிஸான்வபரதான்ய ஸமஸ்த ஸத்வம் ॥** 4

ஹே ஸகியே! ப்ருந்தாவனமானது பூலோகத்திற்கு (ஸ்வர்கத்தைக் காட்டிலும்) கீர்த்தியை விசேஷமாக உண்டு பண்ணுகிறது. ஏனென்றால், தேவகியின் பிள்ளையான ஸ்ரீ க்ருஷ்ணனுடைய திருவடி மலர்களால் அது விசேஷமான சோபையை அடைந்திருக்கிறது. ஸ்ரீ க்ருஷ்ணனுடைய வேணுகான நாதத்தை அனுசரித்து ஆடும் மயில்களுடைய ஆட்டத்தைப் பார்த்து மலைச்சிகரங்களிலிருக்கும் மற்ற எல்லா ப்ராணிகளும் தங்கள் தங்கள் தொழில்களை நிறுத்திவிட்டன.

**தன்யா: ஸ்ம மூடமதயோऽபி ஹரிண்ய ஏதா:**
**யா நந்தநந்தன முபாத்த விசித்ர வேஷம் ।**
**ஆகர்ண்ய வேணுரணிதம் ஸஹக்ருஷ்ணஸாரா:**
**பூஜாம் ததுர் விரசிதாம் ப்ரணயாவ லோகை: ॥** 5

இந்த மான்பேடுகள் மூட புத்தியுடையவைகளாக இருந்த போதிலும் மஹாபாக்யம் பெற்றவைகளே. இந்த மான்பேடுகள் வேணு கானத்தைக் கேட்டு ஆண் மான்களுடன் சேர்ந்து விசித்ர வேஷந் தரித்த நந்தகுமாரனான ஸ்ரீ க்ருஷ்ணனைக் குறித்து ப்ரேமையுடன் கூடின பார்வைகளால் பூஜையைச் செய்தன.

**க்ருஷ்ணம் நிரீக்ஷ்ய வனிதோத்ஸவரூப ஶீலம்**
**ஶ்ருத்வா ச தத்க்வணித வேணு விசித்ர கீதம் ।**
**தேவ்யோ விமானகதய: ஸ்மரநுன்னஸாரா:**
**ப்ரஶ்யத் ப்ரஸூந கபரா முமுஹுர் விநீவ்ய: ॥** 6

விமானத்தில் செல்கின்ற தேவஸ்த்ரீகளும், ஸ்த்ரீகளுக்கு உத்ஸாஹத்தை உண்டாக்குவதற்கு ஏற்ற ரூபத்தையும் சீலத்தையுமுடைய ஸ்ரீ க்ருஷ்ணனைப் பார்த்து, அவரால் இசைக்கப்பட்ட ஆச்சரியமான வேணுகானத்தைக் கேட்டும் ஹ்ருதய தாபங்களால் தைரியம் குன்றியவர்களாய் உதிர்ந்த புஷ்பங்களையுடைய கூந்தலுடையவர்களாய் வஸ்த்ரங்கள் அவிழ்ந்தவர்களாய் மோஹமடைந்தார்கள். (தொடரும்)

# பாகவத தேன்துளிகள்

1. தேவகிக்கும் வஸுதேவருக்கும் விவாஹம் முடிந்து, கம்ஸன் தேர் ஓட்ட, ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். அப்பொழுது வானில் இருந்து அசரீரீ, கம்ஸனைப் பார்த்து, ''தேவகிக்கும் வஸுதேவருக்கும் பிறக்கும் எட்டாவது குழந்தையால் உனக்கு மரணம் ஸம்பவிக்கும்'' என்று கூறிற்று. உடனே கம்ஸன், தேவகியையும், வஸுதேவரையும் சிறையிலிட்டு, பிறக்கும் ஒவ்வொரு குழந்தையையும் கொன்று வந்தான். கம்ஸன் இதற்குப் பதிலாக தேவகியை தனியாகவும், வஸுதேவரை தனியாகவும் சிறையிட்டிருந்தால், குழந்தை பிறப்பதற்கே வாய்ப்பில்லை. ஏன் இந்த ஸுலபமான விஷயம் கம்சனுக்கு தோன்றவில்லை?

எப்பொழுதும், எங்கும், எதிலும், பகவானுடைய ஸங்கல்பம்தான் ஜயம் பெறும். அதற்குத் தடையாக இருக்கக்கூடிய சில ஸுலபமான விஷயங்கள் கூட நம் புத்தியில் தோன்றாமல் செய்துவிடும், பகவானுடைய மாயை.

2. ஸ்ரீமத் பாகவதத்தில் தஸமஸ்கந்தத்தில், ஸ்ரீக்ருஷ்ணனின் அவதாரம் சொல்லப்பட்டுள்ளது. பகவான் அவதரிக்கும் ஸமயத்தில் தேவகியும், வஸுதேவரும் காராக்ருஹத்தில் இருந்தனர். பகவானிடத்தில் இருந்த பயத்தால், கம்ஸன் கடுமையான காவல்களை ஏற்பாடு செய்து இருந்தான். காராக்ருஹம் நன்கு பூட்டப்பட்டு இருந்தது. வெளியில் பல காவலாளிகள் இருந்தனர். வஸுதேவருக்கும், தேவகிக்கும் கைகளில் விலங்கிடப்பட்டு இருந்தது.

பகவான் அவதரித்து அவர்களிடம் சொல்லும்பொழுது ''என்னைக் கொண்டு போய் கோகுலத்தில் விடு'' என்று மட்டும் சொன்னான். கோகுலமோ யமுனைக்கு அக்கரையில் இருக்கிறது. வஸுதேவர் பகவானைப் பார்த்து, ''கைகளில் விலங்கு உள்ள பொழுது இத்தனை கட்டுக்காவலையும் மீறி, யமுனையையும் தாண்டி, நான் எவ்வாறு இந்த அர்த்த-ராத்ரியில் கடும் மழையில் கோகுலம் செல்வேன்?'' என்று வினவவில்லை. பகவானும், இதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், குழந்தையை எடுத்துச் செல்லும்பொழுது கைவிலங்குகள் தானாக விடுபட்டன. காவலாளிகள் தங்களை மறந்து இருந்தனர். காராக்ருஹத்தின் கதவு தானாக திறந்து கொண்டது. யமுனை தானாகவே வழிவிட்டது. ஆதிசேஷன் குடைபிடித்துக் கொண்டு வந்தார். பகவானுடைய ப்ரேரணைக்கு ஸர்வ ப்ரபஞ்சமும் அனுகூலமாக ஆவதை நாம் இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

3. கோகுலத்தில் கோபர்கள் வருடா வருடம் இந்திரனுக்கு யாகம் செய்து வந்தார்கள். பகவான் ஒரு ஸமயம், இந்திரனுக்கு யாகம் செய்ய தேவையில்லை என்றும், கோவர்த்தன மலைக்கே பூஜை செய்துவிடலாம் என்றும் கூறி விட்டான். கோபர்களும் இதற்கு ஸம்மதித்து அவ்வண்ணமே செய்தனர். இதனால் கோபம் அடைந்த இந்திரன் பெருத்த மழையை ஏழு நாட்களுக்கு விடாமல் பெய்வித்தான். கோபர்களும், பசுக்கூட்டங்களும் பரிதவித்தனர். ஆனால், அவர்கள் பகவானிடம் கொண்ட பக்தி எத்தகையது என்றால், அவர்களில் ஒருவர் கூட பகவானைப் பார்த்து, ''உன் பேச்சைக் கேட்டுதான் நாங்கள் யாகத்தை நிறுத்தினோம். இப்பொழுது ஶ்ரமப்படுகிறோம்'' என்று கூறவில்லை. அத்தகைய ப்ரேமையை பகவானிடம் அவர்கள் வைத்து இருந்ததால்தான் கோவர்த்தன மலையை உத்தாரணம் செய்து அவர்களை பகவானும் ரக்ஷித்தான்.

4. ஒரு ஸமயம், ப்ருந்தாவனத்தில் ப்ரஹ்மா, கண்ணன் மேய்த்து கொண்டு வந்த மாடுகளையும், கன்றுகளையும், கோபர்களையும், ப்ரஹ்மலோகத்திற்கு அழைத்துச் சென்று வைத்து இருந்தார். பிறகு, தனது தவறை உணர்ந்து பகவானை நமஸ்கரித்து பலவாறாக ஸ்தோத்திரம் செய்தார். ஆனால் அத்தருணத்தில், பகவான் ஒரு வார்த்தை கூட ப்ரஹ்மாவுடன் பேசவில்லை. தன்னுடைய ஸ்ருஷ்டி கார்யத்தை விட்டு, கர்வம் அடைந்து, ப்ரஹ்மா இது போல் நடந்து கொண்டது பகவானுக்கு பிடிக்கவில்லை போலும்!

5. பகவான் பிறந்தபொழுது யமுனை வழிவிட்டது. அதாவது ஜலம் வசப்பட்டது. ஒரு ஸமயம், பகவான் காட்டுத்தீயை விழுங்கினான். தீ வசப்பட்டது. த்ருணாவர்த்தன் என்ற அஸுரன் காற்று ரூபமாய் வந்தபொழுது அவனைக் கொன்றான். வாயு வசப்பட்டது. கோவர்த்தன மலையை உத்தாரணம் செய்தான். பூமி வசப்பட்டது. மகாபாரத யுத்தத்தில் ஜயத்ரதனை கொல்லும் ஸமயத்தில் ஆகாஶத்தில் சூரியனையே சில கணங்கள் மறைத்து விட்டான். ஆக, ஆகாஶமும் வசப்பட்டது. பஞ்ச பூதங்களும் பகவானின் வசத்திலே இருந்தன என்பது தெரிய வருகின்றது.

6. குசேலர் பகவானை தரிசிக்க வந்த ஸமயத்தில், குசேலர் லஜ்ஜையுடன் இருந்ததால், பகவான் அவரை ஸஹஜ நிலைக்குக் கொண்டு வர, தானும், அவரும் ஸாந்தீபனி குருவிடம் அத்யயனம் செய்யும்பொழுது நடந்த சில ஸம்பங்களை நினைவு கூர்ந்தார். அப்பொழுது பகவான், தான் குருபுத்திரனை காப்பாற்றிய விஷயம் பற்றி ஒரு வார்த்தைக்கூட சொல்லவில்லை. பகவான் தான் செய்த அனுக்ரஹங்களை வெளிப்படுத்துவது இல்லை என்பது இதிலிருந்து தெரிய வருகின்றது.

# நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 13

- நித்யக்னிஹோத்ரி ப்ரஹ்மஸ்ரீ
**A. ஸுந்தரேஸ ஶர்மா வாஜபேயயாஜி**

## ஸ்வாதீ

மஹா நக்ஷத்ரங்களில் ஒன்றாக ஸ்வாதீ சொல்லப்படுகிறது. ஸ்வாதீ நக்ஷத்ரம் வரனுக்கோ, வதுவுக்கோ இருந்தால் பொருத்தமே பார்க்க வேண்டியதில்லை என்பதுண்டு. வேதத்தில், ஸ்வாதீ நக்ஷத்ரம் அளிக்கும் பலன் குறித்து உயர்வாக சொல்லப்பட்டு உள்ளது. ஒரு கன்னிகையை ஸ்வாதீ நக்ஷத்ரத்தில் கன்யா தானம் செய்து கொடுத்தால் அந்த கன்யை பர்த்தாவின் வீட்டை, தன் பிறந்த வீடாகவே நினைப்பாள். பிறந்த வீட்டிற்கு திரும்பிவர விரும்பமாட்டாள். அதாவது, ஒரு நாள் கூட பர்த்தாவை விட்டு பிரிந்திருக்கப் பொறுக்கமாட்டாள். அவ்வளவு ப்ரியமாக இருப்பாள் என்பது தாத்பர்யம். நாள், கிழமை, யோகம் என மற்ற எதுவும் பார்க்காமல் ஸ்வாதீ நக்ஷத்ரத்தில் விவாஹம் செய்து கொடுக்கலாம். மிகவும் உயர்வானது ஸ்வாதீ. மேலும், ஸ்வாதீ நக்ஷத்ரத்தின் பெருமை ஒன்று உண்டு. ஸ்வாதீ அன்று பெய்கிற மழை பிந்துக்கள் சிப்பியில் விழுந்து முத்துக்கள் ஆகின்றன. இவ்விதம், ஸ்வாதீயின் பெருமை அளவு கடந்தது.

ஆகாஶத்தில் தீபம் போல், மிகப் ப்ரகாஶமாக ஒரே நக்ஷத்ரமாக இது ப்ரகாசிக்கிறது. ஜ்யோதி என்னும் பெயர் பெற்றதாகவும், ஸப்த ரிஷி மண்டலத்தில், வால் பாகத்தில் இருப்பதாகவும் சொல்கிறார்கள். ஆடி மாதம் 4-ந் தேதி முதல் 17-ந் தேதி முடிய நக்ஷத்ரோதய காலத்தில் ஸ்வாதியைக் காணலாம். ஸ்வாதீ நக்ஷத்ர தேவதை வாயு. மான் மேல் ஏறியவராகவும், கேடயம், மான் தோல் வைத்திருப்பவராகவும் ப்ரகாசிக்கிறார். ஸ்வாதியில் பிறந்தவர் வினயமுள்ளவராகவும், தயை உடையவராகவும், தர்மத்தை அனுஷ்டிப்பதில் மிகவும் ப்ரியமுடையவராகவும் இருப்பார். எல்லோரிடமும் இனிமையாகவும், ப்ரியமாகவும் பேசுவார்.

வியாபாரத்தில் ஈடுபட்டு மிகவும் லாபத்தை அடைவர். ஸாதுக்களை பூஜிப்பதில் மிகவும் பற்றுக் கொண்டவர். இவர்களை ஸாதாரணமாக ஏமாற்ற முடியாது. நல்லது கெட்டது இவற்றை பகுத்தறிந்து செயல்படக்கூடியவர். ஸ்திரீகளிடம் தயை கூர்ந்தவர். உயர்ந்த ஸரீரம், உயர்ந்த மூக்கு, இளைத்த துர்லபமான ஸரீரம் கொண்டவர். ஒரே இடத்தில் இருப்பதை விரும்ப மாட்டார். ஸஞ்சாரத்தில் அதிகம் பற்று உள்ளவர்கள். இவர்கள் ஸரீரத்தில் ஏதோ ஒரு அங்கத்தில் பூர்ணகுறைவு இருக்கலாம். வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் ஸ்வாதீ நக்ஷத்ரகாரர்களது ஸஹாயத்தை அடைந்தால் அனுகூலமுண்டு. தான் இருக்கும் இடத்தை கலகலப்பானதாகவும், த்வேஷ மனப்பான்மை இல்லாததாகவும் செய்து விடுவார்கள். எந்த முடிவையும் நினைத்த மாத்ரத்தில் தீர்மானித்து விடுவார்கள். யாவரையும் ஸமமாக முதலில் பார்க்கும் ஸ்வபாவம் இவர்களுக்கு இருப்பதால் சிலரிடம் சில ஸமயம், இவர்கள் ஏமாறவும் நேரிடலாம்.

நக்ஷத்ரங்களுக்குள் ஸ்வாதீ நக்ஷத்ரத்தை ஹ்ருதயமாக சொல்லப்பட்டு உள்ளது. இதனாலும், ஸ்வாதீ மிக முக்கியத்துவத்தை அடைகிறது. இவர்கள் ஶாந்த ஸ்வபாவமாக இருந்தாலும், இவர்கள் ப்ரபாவித்துவிட்டால் யாரும் ஸமாளிக்க முடியாத தன்மை கொண்டவர்கள். ஆக, மிக உயர்ந்த பெருமைகள் கொண்டது ஸ்வாதீ நக்ஷத்ரம். ஸ்வாதியில் ஒரு க்ருஹத்தில் ஒரு குழந்தை பிறந்தால், அந்த பெற்றோர்கள் தங்கள் வாழ்க்கையில் நிச்சயம் முன்னேற்றம் காண்கிறார்கள். ■

---

அவதார புருஷர்கள் ஸங்கல்ப மாத்திரத்திலேயே எதையும் ஸாதிக்க வல்லவர்கள். அவர்களுடைய அவதார கார்யத்தில் நம்மையும் பங்கு கொள்ளச் செய்வது என்பது, நமக்கு அந்த பாக்யத்தை அளிப்பதற்கே ஆகும்.

தந்தை, கடைத் தெருவிற்கு கிளம்பும் பொழுது அவருடன், அவருடைய சிறு குழந்தையும் கூட வர அடம் பிடிக்கும். தந்தை அவ்வாறு அழைத்துச் செல்லும் பொழுது, குழந்தையின் கையில் சிறு பையை கொடுத்துத் தூக்கிவரச் சொல்வார்.

அது போலவேதான் இதுவும்.

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : அநேக மஹாத்மாக்களின் ஸன்னிதானங்களில் சுற்றியிருப்பவர்களிடையே போட்டியும், பொறாமையும், ஒரு Discipline'ம் இல்லாமல் இருக்கின்றதே. ஆனால், ப்ரஸித்தியாக இருக்கக்கூடிய (ஒருவருடைய பெயரைச் சொல்லி) அங்கு எல்லாம் எவ்வளவு அழகாக Discipline ஆக நடக்கின்றது. இதற்குக் காரணம் என்ன?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : சில இடங்களில் எல்லோரும் Disciplineனுடன் இருப்பதற்கு காரணம் நிர்வாக ஸாமர்த்தியம் மட்டும் அல்ல. அங்கு இருப்பவர்கள் Brain wash செய்யப்படுகின்றார்கள். Mass ஹிப்னாடைஸ் அல்லது Mass மெஸ்மரைஸ் செய்யப்படுகின்றார்கள். அதனாலேயே அவர்கள் அப்படி நடந்து கொள்கின்றார்கள். அநேக, உண்மையான மஹாத்மாக்கள், நிர்வாக விஷயங்களில் தலையிடுவதே இல்லை. வரக்கூடிய எவரையும் தன்னை, முட்டாள்தனமாக ஏற்றுகொள்ள அவர்கள் சொல்வதில்லை. விவேகத்துடன் ஏற்றுக் கொள்ள சொல்கின்றார்கள். தன்னை எதிர்ப்பதற்கும் சுதந்திரம் தருகின்றார்கள். இது அவர்களின் அபார கருணையே ஆகும்.

*கேள்வி : அவர்களை தூஷிப்பதனால் பாபம் ஸம்பவிக்குமா?*

பதில் : அது அவரவர்களுடைய ஸ்திதியை பொறுத்தது. என்னைப் பொறுத்தவரை, எனக்கு ஹிம்சை செய்பவர்களுக்கும் தூஷிப்பவர்களுக்கும் கூட நன்மையே செய்யும்படி நான் இறைவனிடம் ப்ரார்த்திக்கின்றேன்.

*கேள்வி : நீங்கள் அடிக்கடி பெரிய பெரிய மஹோத்ஸவங்கள் நடத்துகின்றீர்களே. இவைகள் எல்லாம் லோக க்ஷேமத்திற்காகவா?*

பதில் : இந்த இடத்தில் உள்ள பகவானிடம், நம்பிக்கையுடன் வருபவர்கள் தலைமுறை தலைமுறையாக ஹரி நாமத்தை ஜபம் செய்து கொண்டு இகம், பரம் இரண்டிலும் ஸகல க்ஷேமங்களையும் அடைய வேண்டும் என்று நினைத்தே நான் அடிக்கடி நமது ஸங்கத்தின் மூலம் பல புண்ய கார்யங்களை செய்து வருகின்றேன்.

*கேள்வி : ஸம்ஸ்க்ருத மொழியை எல்லோரும் படிக்கலாமா?*

பதில் : ஸம்ஸ்க்ருத மொழியை யார் வேண்டுமானாலும் படிக்கலாம். அதற்குத் தடை ஒன்றும் இல்லை.

*கேள்வி : சித்த வைத்தியம் என்றால் என்ன? இவைகள் சித்தர்களால் கூறபட்டவைகளா? சித்தர்கள் என்பவர்கள் யார்?*

பதில் : சில மந்திரங்களை குருமுகமாக உபதேசம் வாங்கிக் கொண்டு, விடாமல் பல காலம் ஜபம் செய்துவர நாக்கின் அடியிலிருந்து உமிழ்நீர் போன்று ஒரு திரவம் எப்பொழுதும் வரும். இதை அமிர்தம் என்றும் சிலர் கூறுவதுண்டு. பிறகு இவர்களால் பல வியாதிகளுக்கு ஏற்ற மருந்துக்களைக் கூற முடியும். அப்படிப்பட்டவர்கள் கூறியதுதான் சித்த வைத்தியம்.

*கேள்வி : என்னுடைய குடும்பம், இந்த உலகம், யாவற்றையும் ரஸிக்கின்றேன். ஞானம் வந்துவிட்டால், இவையெல்லாம் என்னிடமிருந்து விலகிவிடுமோ என்ற பயம் எனக்கு உள்ளதே !*

பதில் : பயமே தேவையில்லை! உண்மையான ஞானத்தை ஒருவன் அடைந்த பிறகுதான், அனைவரையும், அனைத்தையும் மிகவும் உயர்ந்த முறையில் ரஸிக்க முடியும். ஆகவேதான், எந்த ஸ்ரீமத் பாகவதம் ஸ்ரீ க்ருஷ்ணனை ப்ரஹ்மஞானியாய் வர்ணித்துள்ளதோ, அதே பாகவதம்தான் ஸ்ரீ க்ருஷ்ணனை ரஸிக ஶிகாமணியாகவும் வர்ணித்துள்ளது.

---

பின் அட்டைப்படம் : பெங்களூரில் நடைபெற்ற 'ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ ஸதக்ருது' வைபவத்தில், 'ஸ்ரீ மஹா ஸ்வாமிகளின் ஜயந்தி' ஊர்வலத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள்.

Photos by : Sri R. Kalyanakrishnan

# வேத கதைகள்-14

- தர்மக்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவிரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேச ஸாஸ்திரிகள்

## ஆபத் தர்மம்

ஒரு ஸமயம், இடி விழுந்து தரை முழுவதும் காய்ந்து போனதால் குரு தேசத்தில் கடும் பஞ்சம் ஏற்பட்டது. அந்த குரு தேசத்தில் யானைப் பாகர்கள் அதிகமாக இருந்தனர். அந்த தேசத்தில் உஷஸ்தி என்பவர், ருதுவாகாத பெண்ணை மணந்து குடும்பம் நடத்தி வந்தார். பண்டைய காலங்களில் ருது ஆவதற்கு முன் பெண்களுக்கு விவாஹம் நடந்தது என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

உஷஸ்தி, ஆகாரத்திற்குக் கூட வழி இல்லாமல் கஷ்டப்பட்டார். எங்கேயாவது உணவு கிடைக்குமா என்று அலைந்தார். அப்பொழுது ஒரு யானைப்பாகன் கொள்ளு தானியத்தை உண்டு கொண்டு இருந்தான். அவனிடம் தனக்கு உணவு அளிக்குமாறு வேண்டினார். அதற்கு அவன், ''இந்த பாத்திரத்தில் உள்ளதைத் தவிர வேறு தனியாகக் கிடையாது. இதுவோ நான் உண்ட மீதி, தேவை என்றால் அளிக்கிறேன்'' என்றான். அதற்கு அவர், ''இப்பொழுது நான் ஆகாரம் செய்யாவிடில் என் உயிருக்கு ஆபத்து ஏற்படும். ஆதலால், நீ உண்ட மீதியாக இருந்தாலும் எனக்கு அளிப்பாயாக என்று கூறினார். அவனும், தான் உண்ட மீதியை அவருக்கு அளித்தான். அதை அவர் உண்டார்.

சற்று நேரத்தில், அவருக்கு விக்கல் ஏற்பட்டது. இந்த ஜலத்தைக் குடியுங்கள் என்று ஜலத்தைக் கொடுத்தான். அப்பொழுது, ''இந்த ஜலம் நீ குடித்த எச்சல், நான் குடிக்க மாட்டேன். ஜலம் எங்கும் கிடைக்கும்'' என்று நிராகரித்தார். உடனே அந்த யானைப்பாகன், ''நான் அளித்த கொள்ளு எச்சில் இல்லையா, அதை மாத்திரம் பெற்று கொண்டீரே!'' என்று கேட்டான். அதற்கு அவர், ''அப்பொழுது அந்த கொள்ளை நான் உண்ணாவிடில் என் உயிர் போய்விடும். தற்சமயம் இந்த ஜலத்தை குடிக்காவிடினும் உயிர் போகாது'' என்று கூறினார். இதிலிருந்து, உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் இருக்க ஏதாவது உண்ணலாம் என்று தெரிகிறது.

வ்யாஸர் ப்ரஹ்ம ஸூத்ரத்தில், *"ஸர்வான்னாநோ மதிஸ்ச ப்ராஜாத்யயே தத்தாசனாத்"* என்பதில் இந்தக் கதையைக் கூறி விளக்கி இருக்கிறார். பிறகு உஷஸ்தியானவர் அந்த கொள்ளை தான் பாதி உண்டு, பாதியை தன் மனைவிக்கு எடுத்து வந்தார். அவள் இதற்கு முன்பே பிச்சை கேட்டு அதனால் தன் உணவை முடித்து இருந்தாள். திறமைமிக்கவளாக, அவர் அளித்த கொள்ளை வாங்கி ஜாக்ரதையாக வைத்து இருந்தாள்.

மறுநாள் காலையில் அவருக்கு பசி எடுத்தது. உடன், உண்பதற்கு ஏதாவது இருந்தால் எனக்குக் கொடு. அருகில் ஒரு அரசன் யாகம் செய்கிறான். அவன் என்னை உத்காத்ரு கனத்திற்கு தலைவனாக இருந்து யாகத்தை நடத்தித் தரவேண்டும் என்று என்னை வேண்டினான். தற்சமயம் ஆகாரம் கிடைத்தால் அதை உண்டு யாகத்திற்கு செல்லலாம் என்றார். உடனே அவள், முதல் நாள் அவரால் அளிக்கப்பட்ட கொள்ளை அவருக்கு அளித்தாள். இந்த கொள்ளு தானியத்திற்கு, யானைப்பாகன் உண்ட மீதி, தான் உண்ட மீதி, பழையது என்று மூன்று தோஷங்கள் இருந்தாலும் மனைவியிடமிருந்து கொள்ளை பெற்று உண்டார்.

பிறகு அரசன் யாகம் செய்யும் இடத்திற்கு சென்று, தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். ஔத்காத்ர ப்ரயோகத்தில் இந்த உஷஸ்தியானவருக்கு நிகர் யாரும் இல்லை. அரசன் அவர் தலைமையை ஏற்று யாகம் செய்ய வேண்டுமென்று எண்ணி இருந்தான். அவர் இருக்குமிடம் தெரியாததால் வேறு ஸாமவேதிகளை வரவழைத்து யாகம் செய்து கொண்டிருந்தான். உஷஸ்தி வந்ததும் அவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. "ஓ முனிவரே, தங்களைதான் தேடிக் கொண்டிருந்தேன். தங்களை காணமுடியாததால் இவர்களை அழைத்து வந்தேன். தாங்கள் தலைமை ஏற்று இந்த யாகத்தை நன்கு நடத்தி வைக்க வேண்டும்" என்று வேண்டினான். இந்த யாகத்தில் இந்த ரித்விக்குகளுக்கு ஒவ்வொருவருக்கும் என்ன தக்ஷிணை அளிக்கிறாயோ அவ்வளவு எனக்கு தக்ஷிணை அளித்தால் இந்த யாகத்தை நான் நடத்தி வைக்கிறேன் என்று உஷஸ்தி பதில் கூறினார். அரசனும் மகிழ்ச்சியுடன் அதை ஏற்று அவர் உதவியால் யாகத்தை நன்கு செய்தான். அவருக்கு தக்ஷிணையும் தந்தான்.

இந்த கதையால் ஆபத் காலத்தில் ஆகார நேமம் பார்க்கத் தேவையில்லை என்றும், ஆபத்து இல்லாத காலத்தில் நேமத்துடன் இருக்க வேண்டும் என்றும் தர்மங்கள் நமக்கு நன்கு வெளியாகின்றன. ■

# எந்தரோ மஹானுபாவுலு - 2

ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகளுக்கு, கும்பகோணத்தில் ஸகல மரியாதைகளுடன் வைபவமாக வரவேற்பு அளிக்கப்பட்டு பட்டண ப்ரவேசம் நடந்தது. இதைக்கண்டு பொறாமை மேலிட்ட சைவ ஸன்யாசி, மறு நாளே வாதத்திற்கு அவரை அழைக்க, ஸ்வாமிகளும் அதற்கு ஒப்புக் கொண்டார்.

மறு நாள், ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகள், மேனாவில் குறித்த நேரத்திற்கு முன்பே கிளம்பினார். வழியில் ஸ்ரீ லிங்கராஜேந்திரர் அவரது மேனாவிலிருந்து ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகளை உற்று நோக்கி விட்டு தனது மேனாவிலிருந்து பக்கத்திலிருந்த மதில்சுவர்மேல் குதித்தார். உடனே ஆச்சரியமாக அந்த மதில்சுவர் நகர ஆரம்பிக்க, மக்கள் அதிசயித்தனர். ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகளோ ஶாந்தமாக மேனாவை கீழே இறக்கச் சொல்லி உத்தரவிட்டார். கீழே இறங்கிய பல்லக்கு, ஆகாயத்தில் விமானம் போல் பறந்து சைவ ஸன்யாசியைத் தாண்டி முதலில் ஸ்ரீ கும்பேஶ்வரர் கோயில் வாயிலில் இறங்கியது. மக்கள் இந்த காட்சியைப் பார்த்து மேலும் ஆச்சர்யம் அடைந்தனர். ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகளுக்கு மந்திர ஶக்தியில் ஏற்பட்ட ஆரம்ப வெற்றி, இறுதி வரை தொடர்ந்து பல வெற்றிகளை அவருக்குக் குவித்தது.

ஸபையில் பண்டிதர்களும் அதிகாரிகளும் பொது மக்களும் கூடி இருந்தனர். ஸ்ரீ லிங்கராஜேந்திரர் கர்வத்துடன் ஸபையில் ப்ரவேசம் செய்து தன் ஆசனத்தில் அமர்ந்தார். ஸ்வாமிகள் வினயத்துடன் நேரே ஸ்ரீ கும்பேஶ்வரர், ஸ்ரீ மங்களாம்பாள் ஸன்னிதிகளுக்குச் சென்று, வாயார திவ்ய தம்பதிகளை ஸ்தோத்ரம் செய்த பிறகு, த்யானத்துடன் ப்ரார்த்தனை செய்து மந்தஹாஸ வதனத்துடன் தன் ஆசனத்தில் வந்து அமர்ந்தார். அவரது திவ்ய தேஜஸ் அனைவரையும் பரவசப்படுத்தியது. நடுவர்கள் தீர்மானம் ஆயிற்று. ஒன்பது நாட்கள் விவாதம் என்றும், ஜயித்தவரிடம் தோற்றவர் தம் மடத்தை ஒப்புவித்து, தாமும் அவர் சீடராக வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டு, இருவரும் அதை ஏற்றுக் கொண்டனர்.

இருவரும் இணையில்லா பண்டித சிங்கங்கள். வேதம், புராணம், இதிஹாஸம், இதர ஶாஸ்த்ரங்கள் ஆகியவற்றிலிருந்து ஆணித்தரமாகவும், சுவையாகவும், வேடிக்கையாகவும் விவாதம் நடத்தினர். ஒவ்வொரு நாளும் ஸ்வாமிகளே வென்றார்.

ஒன்பது நாள் விவாதம் முடிந்ததும் ஸ்ரீ லிங்கராஜேந்திரர் மேலும் இரண்டு நாள் அவகாசம் கேட்டார். அன்று, ஸ்ரீ ஸுரேந்திரதீர்த்தரும், ஸ்ரீ சிவப்ப நாயக்கரும் தஞ்சையிலிருந்து கும்பகோணம் விஜயம் செய்திருந்தனர். கடைசி நாள் விவாதம் துவங்குமுன் தஞ்சை மன்னருடனும் தனது குருவுடனும் ஸ்ரீ விஜயீந்த்ரர், ஸ்ரீ மங்களாம்பிகை ஸன்னதியில் த்யானத்தில் ஆழ்ந்தார். திடீரென ஸ்வாமிகளின் கழுத்தில் மல்லிகைப் பூமாலை காணப்பட்டது. ஏதும் புரியாமல் அனைவரும் திகைத்தனர். ஸ்வாமிகளின் குரு ஸ்ரீ ஸுரேந்திரர் உடனே, ''குழந்தாய், ஸ்ரீ மங்களாம்பிகை என் முன் தோன்றி தன் கழுத்தில் உள்ள புது மல்லிகை மாலையை உனக்கு அணிவிப்பதை நான் கண்ணாரக் கண்டு பெருமிதம் அடைந்தேன். வெற்றி உனதே, வா செல்வோம்'' என்றார்.

அன்றைய விவாதத்தில் ஸ்வாமிகள் வெற்றி அடைந்தார். ஜனங்கள் கரகோஷம் செய்தனர். மன்னர் எல்லையில்லா ஆனந்தம் அடைந்தார். ஒப்பந்தப்படி தோல்வியை ஒப்புக்கொண்டு சைவ ஸன்யாசிகள், மடத்தையும் எல்லா கோவில்களின் நிர்வாக அதிகாரத்தையும் ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகளிடம் ஒப்புவித்தனர். உடனே ஸ்வாமிகள், ஸ்ரீ லிங்கராஜேந்த்ரரை அன்புடன் தம் பக்கம் அழைத்து ''ராஜரே! நீர் பெரிய பண்டிதர். உமது வாதத் திறமையும் அபாரமானது. நீர் எனது ஆப்த நண்பராகிவிட்டீர். மடமும், கோவில் நிர்வாஹமும் மட்டும் எனக்குப் போதும். மற்றபடி மடத்து சொத்து எனக்கு வேண்டாம், நீரும் எனது சிஷ்யனாக வேண்டியதில்லை'' என்றார்.

ஸ்ரீ லிங்கராஜேந்த்ரர் கண்ணீர் பெருக, தழுதழுத்த குரலில் ''ஸ்வாமிகளே! நீர் மிகப் பெரிய மஹான். தங்களிடம் தோற்றதை நான் வெற்றியாகவே கருதுகின்றேன். எனக்கு மடமும், சொத்தும் தேவையில்லை. என் பூஜைப்பெட்டி மட்டும் எடுத்துக் கொண்டு உங்கள் அனுமதியுடன் மைசூர் செல்கிறேன்'' என்று கூறினார். ஸ்வாமிகள் தன் கையினாலேயே ஸ்ரீ லிங்கராஜேந்த்ரருக்கு ஜோடி ஶால்வை போர்த்தி நிறைய ஸன்மானங்கள் வழங்கி அன்புடனும், மரியாதையுடனும் அனுப்பி வைத்தார்.

ஸ்ரீ சிவப்ப நாயக்கர், ஸ்வாமிகளிடம் வினயத்துடன், அவருக்கு வெற்றி ஊர்வலம் நடத்த அனுமதி வேண்டினார். குருவின் அனுமதி பெற்று ஸ்வாமிகள் ஒப்புக் கொள்ள, கம்பீரமான யானை மேல் தனது குரு ஸ்ரீ ஸுரேந்திரர் முதலில் யானை மீது செல்ல, பின்னால் மற்றொரு யானை மீது ஸ்ரீ விஜயீந்த்ரர் கும்பகோணத்து வீதிகளில் வேத கோஷம்

முழங்க, ஸ்ரீ புரந்தரதாஸரின் ஸத்புத்திரர்கள் கீர்த்தனங்கள் பாடி ஆட, பவனி வந்தனர்.

ஸுவாஸினிகள் கானம் இசைத்தனர். அவர் வரும் மார்க்கத்தில் புஷ்பங்கள், பொரி இவற்றை கன்யைகள் இறைந்தனர். ''அஜேய விஜயீந்த்ரருக்கு ஜே!'' என்ற கோஷம் வானை எட்டியது. வீட்டுக்கு வீடு பூர்ணகும்பம் கொடுத்தனர். ஊர்வலம் சிவ மடம் வந்ததும் இரு ஸ்வாமிகளும் உள்ளே சென்று விசேஷ பூஜை நடத்தி, அனைவருக்கும் தீர்த்த ப்ரசாதம் வழங்கினார்கள்.

பிறகு, குரு, சிஷ்யர் இருவரும் திக்விஜயயாத்ரை செய்ய ஆரம்பித்தனர். ஆங்காங்கே மக்கள் அலை அலையாக வந்து அவரிடம் உபதேசம் பெற்று, தப்த முத்ராதாரணம் பெற்று ஸ்ரீ மூலராமனின் பூஜை வைபவங்களை கண்ணாரக் கண்டுகளித்து ப்ரஸாதம் பெற்றுச் சென்றனர். இருவரும் காஞ்சீபுரம் வழியாக கர்நாடக தேசம் அடைந்தனர். அங்கு ஸ்ரீ க்ருஷ்ண தேவராயரின் மாப்பிள்ளை ஸ்ரீ ராமராயர், ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு நவரத்னாபிஷேகம் செய்து மகிழ்ந்தார். யாத்திரை முடிந்து குரு சிஷ்யர்கள் கும்பகோணம் திரும்பினார். கும்பகோணத்தில் வித்யாபீடம் அமைத்து, தகுந்த பண்டிதர்கள் மூலம் காவ்ய நாடக அலங்காரம் முதலிய பாட ப்ரவசனங்கள் நடத்த சிறந்த ஏற்பாடுகள் செய்தும், சிறந்த வித்வான்களை ஆஸ்தான பண்டிதர்களாகவும் ஏற்றுக் கொண்டார்.

ஶாஸ்திர வாதத்தில் எவராலும் வெல்ல முடியாத ஸ்ரீ விஜயீந்த்ரரை வேறு வழியில் தோற்கடிக்க வேண்டுமென சிலர் முடிவு செய்தனர். ஸன்யாஸ தர்மத்தில் அறியமுடியாத கலைகளில் அவரை எதிர்த்து வெற்றிக் கொள்ள எண்ணி, பல உயர் கலைஞர்களை தேர்ந்தெடுத்து ஸ்வாமிகளை போட்டிக்கு அழைக்கலாயினர். ஸ்ரீ விஜயீந்த்ரரும், சளைக்காமல் அவர்கள் சவாலை ஒன்றன் பின் ஒன்றாக ஏற்றுக் கொண்டார். த்ரிகால ஞானியான ஸ்ரீ வ்யாஸராஜர் ஏற்கனவே ஸ்வாமிகளுக்கு 64 கலைகளையும் கற்றுத்தந்து ஆசீர்வதித்திருந்தபடியால் ஸகல பந்தயங்களையும் நம் ஸ்வாமிகள் ஏற்று வெற்றி பெற்றதில் வியப்பென்ன! ஸ்வாமிகள் சந்தித்த சவால்களை ஒவ்வொன்றாகப் பார்ப்போமா!

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

# நமது சிந்தனைக்கு

- ஸ்ரீ ஸ்வாமிகள்

இறைவனை அடைய வேண்டுமானால் காமம், காஞ்சனம், கீர்த்தி, கோபம், பயம் இவைகளையெல்லாம் விட்டு விட வேண்டும் என்று பலர் பலவாறாக உபதேசித்தும் எழுதியும் வருகின்றார்கள். உண்மைதான். இறை தரிசனத்திற்கு இவைகள் தடை என்பதில் யாருக்கும் எந்த வித ஐயமும் இல்லை. ஆனால், இவைகளை எப்படி விடுவது? நாம் இதுவரை பல பிறவிகளை எடுத்து வந்திருப்பதால், இவைகளெல்லாம் நம்முடைய உள்ளத்தில் ஆழ்ந்த வாஸனைகளாக பதிந்துள்ளன. ஒருவனைப் பார்த்து, ''நீ கோபப்படாமல் இரு'', என்று உபதேசிப்பதில் ஒரு ப்ரயோஜனமும் இல்லை. அதே போல் நாமும், நம்முடைய மனதைப் பார்த்து நீ இனிமேல் கோபப்படாதே, பயப்படாதே, காம வசப்படாதே என்று உபதேசிப்பதால் ஒரு பயனும் இல்லை. மனது, ஒருபொழுதும் கட்டளைக்கு அடிபணியாது. அப்யாசத்தினாலேயே அதை வழிக்கு கொண்டு வரவேண்டும்.

யாருக்கு இறை தரிசனம் ஏற்பட்டு உள்ளதோ அவர்களுக்கு இந்த ப்ரபஞ்ஜம் தெரியாது. யாருக்கு ப்ரபஞ்ஜம் தெரிகிறதோ அவர்களுக்கு இறை தரிசனம் இல்லை. யாருக்கு மனது அழியவில்லையோ அவர்களுக்கு ஆத்ம ஞானம் இல்லை. யாருக்கு ஆத்ம தரிசனம் ஏற்பட்டு விட்டதோ அவர்களுக்கு மனதில்லை. இருளும் ஒளியும் எப்படி ஒரே இடத்தில் இருக்க முடியாதோ அதே மாதிரி ஞானமும் அஜ்ஞானமும் ஒரே இடத்தில் இருக்க முடியாது.

சிலர், இல்லற வாழ்க்கை இறைவனை அடைவதற்கு தடை என்று நினைத்துக் கொண்டு கல்யாணம் செய்து கொள்ளாமல் இருக்கிறார்கள். ஆனால் 60, 70 வயது ஆகியும் ஒன்றையும் அடையக் காணோம். அதே போல், தனி அறையில் அமர்ந்து த்யானம் செய்வதும், மான் தோலில் அமர்ந்து த்யானம் செய்வதும் நல்லது என்று படித்த ஒருவர் ஒரு தனி அறையும் கட்டி, மான் தோலையும் விலைக்கு வாங்கி விடுவார். ஆனால், த்யானம் மட்டும் செய்ய மாட்டார். சிலர், தான் யாரை பெரிய மஹாத்மாக்களாக நினைக்கிறார்களோ, அவர்களைப் போலவே தங்களை அலங்கரித்துக் கொண்டும், பேசியும் நடித்தும் வருவார்கள். ஒரு மஹாத்மாவைப் போல வேஷ பூஷணங்களை தரித்துக் கொள்ளவும், அவர்களைப் போலவே பேசவும், பழகவும் முயற்சிக்கின்றார்களே தவிர அவர்களுடைய ஞானத்தை அடைய யாரும் முயற்சிப்பதில்லை.

மான் தோல், தர்பாசனம், விவாஹம் செய்து கொள்ளாமல் இருப்பது, தனி அறை, ஆசாரம், அனுஷ்டானம், வேஷ பூஷணங்கள், தானம், கர்மாக்கள் இவைகள் அனைத்தும் இறைவனை அடையச் செய்யும் ஸாதனைகளுக்கு அனுகூலமே தவிர, இவைகளே ஸாதனைகள் ஆகி விடாது. தீவிரமான ஸாதனைகளில் ஈடுபடுபவர்களுக்கு இவைகள் அனைத்தும் தேவையில்லாமலும் போகலாம். ஒரு அலுவலகத்தில் வேலையில் சேர்ந்த ஒருவருக்கு, ஆரம்பத்தில் இத்தனை மணிக்கு வர வேண்டும், இத்தனை மணிவரை இருக்க வேண்டும் போன்ற பல நிபந்தனைகளை விதிக்கின்றார்கள். அவன் நேர்மையாகவும், பொறுப்புடனும், வேலை செய்வதைக் கண்ட நிர்வாகிகள், போகப் போக அந்த நிபந்தனைகளை அவன் கடைபிடிக்காவிட்டாலும் அதை பொருட்படுத்துவதில்லை.

ஆகையால், ஆரம்ப கால ஸாதனைகளில்தான் ஒருவன் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். ஸாதனைகளில் தீவிரமாக முன்னேறி செல்கையில் அவ்வளவு கட்டுப்பாடுகள் தேவையில்லை. அது போல், ஒருவனைப் பார்த்து கோபத்தை விடு, காமத்தை விடு, கீர்த்தியை விடு என்று உபதேசிப்பதைக் காட்டிலும், அதிகமாக ஜபம் செய். இறைவனுடைய பெருமைகளைப் பாடு, தீவிரமாக ஸாதனைகளில் ஈடுபடு, எப்பொழுதும் த்யானம் செய்து வா என்று உபதேசிப்பதே சாலச் சிறந்ததாகும்.

ஒருவன் தன்னை எவ்வளவுக்கெவ்வளவு இறை வாழ்க்கையில் ஈடுபடுத்திக் கொள்கின்றானோ அவ்வளவுக்கு அவ்வளவு உலக விஷயங்கள் அவனை விட்டு விலகும். உலக விஷயங்கள் விலக விலக மனது ஸுத்த ஸாத்வீக தன்மையை அடையும். ஸாத்வீக மனது ஸுலபத்தில் அடங்கும். அடங்கிய மனது அழியும். மனது அழிய ஆத்ம தரிசனம் ஏற்படும். பகவானும் கீதையில், ப்ரக்ருதிக்கு வசப்பட்டவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதையும், ப்ரக்ருதியை வசப்படுத்திக் கொண்டவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதையும் மிகவும் அழகாக சொல்கின்றார்.

*''மோகாசா மோககர்மாணோ மோகஞானா விசேதஸ:*
*ராக்ஷஸீமா ஸுரீம் சைவ ப்ரக்ருதிம் மோஹினீம் ச்ரிதா:*

ப்ரக்ருதிக்கு வசப்பட்டவர்களை ''மோகாசா'' என்கிறார். அதாவது அவர்கள் வீண் ஆசையுடையவர்களாக இருப்பார்கள். வீண் ஆசை என்பது என்ன?

உலகத்தில், மனிதர்கள் மானத்துடன் வாழ, உடை, உணவு, இருக்கை போன்ற தேவைகளுக்கு ஆசைப்படுவதை வீண் ஆசை என்று சொல்ல முடியாது. ஆரோக்யமில்லாமல் இருக்கும் ஒருவன் ஆரோக்யத்தை அடைய விரும்புவதை வீணாசை என்று சொல்ல முடியாது. விவாக வயதில் இருக்கும் கன்னிகையை நல்ல வரனாகப் பார்த்து விவாகம் செய்து கொடுக்க ஒரு தந்தை நினைப்பது வீணாசையாகாது. தன்னை நம்பியுள்ள ப்ரஜைகளை க்ஷேமமாக வைத்துக் கொள்ள எண்ணும் ஒரு மன்னனின் எண்ணமும் வீணாசையாகாது. இவைகள் எல்லாம் உதாரணங்களே. இவைகளைப் போல் அனேகம் சொல்லிக் கொண்டு போகலாம்.

ஒரு தகப்பனார், தன்னுடைய பெண்ணின் விவாஹத்தை மிகவும் விமர்சையாக, பணத்தை அனாவசியமாக செலவு செய்து நடத்துகின்றார். ஒரு வேளை, மாப்பிள்ளை வீட்டுக்காரர்களின் நிர்பந்தமோ என்றால் அவர்களும் நிர்பந்திக்கவில்லை. பெண்ணிடத்தில் உள்ள ப்ரியமோ என்றால் அதுவும் காரணம் இல்லை. பின் உண்மையான காரணம் என்ன? தன்னுடைய செல்வாக்கையும், அதிகாரத்தையும், பண பலத்தையும், புகழையும் வெளிக் காட்டிக் கொள்ள இந்த விவாஹத்தை ஒரு ஸந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்ள ஆசைப்படுவதே காரணம். இதுவே வீண் ஆசை. அவரைப் போலவே நான் பணம் ஸம்பாதிக்க வேண்டும் என்கிறான். அவரைப் போல என்ன என்றால் அவரைப் போல நான் ஆக வேண்டும் என்று அடம்பிடிப்பான். இதுவும் வீண் ஆசை தான்.

அடுத்ததாக ''மோக கர்மாணா:'' என்கிறார். அதாவது இகத்திற்கோ பரத்திற்கோ பயன்படாத காரியங்களில் ஈடுபடுவார்கள். ஒருவன் தன்னுடைய தேக ரக்ஷணத்திற்காகவும் குடும்ப ரக்ஷணத்திற்காகவும், தேச ரக்ஷணத்திற்காகவும், மேலும், பல சமூக நல காரியங்களுக்காகவும், பல காரியங்களில் ஈடுபடுவது அவசியமே ஆகும். சிலர், வம்பு பேசியும், வீணான சச்சரவுகளில் ஈடுபட்டும், சூதாடியும், மது அருந்தியும் சோம்பேறித்தனமாகவும் நேரத்தைக் கழிக்கின்றனர். மேற்படி காரியத்தினால் இகத்திலோ, பரத்திலோ அவர்களுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படப்போவதில்லை. இவர்களே, பயன்படாத கர்மாக்களை செய்பவர்கள். இவர்களும் ப்ரக்ருதிக்கு வசப்பட்டவர்கள்.

(தொடர்ச்சி..........24-ம் பக்கம்)

# ஹாத்திராம் பாபா

- பாலாஜி

வட இந்தியாவிலிருந்து அநேக ஸாதுக்கள் தென் இந்திய யாத்திரையும், தென் இந்தியாவிலிருந்து அநேக ஸாதுக்கள் வட இந்திய யாத்திரையும் மேற்கொண்டு வருகின்றனர். அப்படி செல்லும் சில ஸாதுக்கள், தங்களுக்கு ப்ரியமான ஏதாவது ஒரு இடத்தில் தங்கி விடுவதும் உண்டு. அப்படி வட இந்தியாவிலிருந்து தென் இந்திய யாத்திரை வந்த ஒரு ஸாது திருமலையிலையிலேயே (திருப்பதியில்) தங்கிவிட்டார். அவருக்கு ஹாத்திராம் பாபா என்று பெயர். ஹாத்திராம் பாபா என்பது காரணப் பெயர். அவர் மிகவும் பருத்த ஸரீரம் உடையவராக இருந்ததால் தன்னைத் தானே ஹாத்தி(யானை) என்று அழைத்துக் கொள்வார். அவருடைய உண்மையான பெயர் என்ன என்பது தெரியவில்லை. எல்லா கால கட்டத்திலும் அந்தந்த காலத்தில் வாழ்ந்த மகான்களுக்கு ஆதரவும் இருந்ததுண்டு, எதிர்ப்பும் இருந்ததுண்டு.

ஒரு ஸமயம், அதே ஊரில் அவரைப் பிடிக்காதிருந்த சிலர் ஒன்று கூடி அவரை எப்படியாவது அவமானப்படுத்த வேண்டும் என்று நினைத்தனர். அவர்கள் அனைவரும் அவரிடம் ஒரு பத்து படி அரிசியை சாதமாக வடித்து, அத்துடன் பத்து கரும்புக் கட்டுகளையும் ஒரு சின்ன அறையில் வைத்து ஹாத்திராம் பாபாவிடம் வந்து, நீர் உண்மையிலேயே ஹாத்தியாக (யானை) இருந்தால் நாளையதினம் பொழுது விடிவதற்குள் இவைகள் அனைத்தையும் உண்ண வேண்டும் என்று கூறி அவரையும் அந்த அறைக்குள் தள்ளி, கதவை சாத்தி பூட்டிக் கொண்டு வெளியே காவல் இருந்தனர்.

அடைக்கப்பட்ட அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் ஹாத்திராம் பாபா, பத்து படி சாதத்தையும் பத்து கரும்புக் கட்டுகளையும் சாப்பிட்டுவிட்டு, கால்களால் கதவுகளை உடைத்து நொறுக்கி, யானையைப் போல் பிளிறிக் கொண்டு வெளியே வந்தார். காவல் இருந்தவர்களும் வேடிக்கை பார்க்க வந்தவர்களும் பயந்து அலறி ஓடினார்கள். இப்படி ஒரு ஸம்பவம் அவரது வாழ்க்கையில் நடந்தது. திருமலையில், உள்ள ஸ்ரீநிவாசபெருமாள் கோவிலை கட்டியது இந்த ஹாத்திராம் பாபாவாகும்.

முன் காலத்தில், ஹாத்திராம் பாபா, கோவிலின் நுழைவு வாயிலில் அமர்ந்திருப்பார். பாலாஜியை தரிசிக்க வரும் பக்தர்கள் அனைவரும் அவரின் பாதத்தில் காணிக்கை செலுத்தினால்தான் உள்ளே சென்று பெருமாளை ஸேவிக்க முடியும். இப்படி ஆரம்பித்ததுதான் திருப்பதி உண்டியலில் காணிக்கை செலுத்தும் வழக்கம். எப்பொழுதெல்லாம் ஹாத்திராம் பாபாவிற்கு பொழுது போகவில்லையோ, அப்பொழுது எல்லாம் அவர் திருப்பதி பெருமாளுடன் சொக்கட்டான் ஆடுவார். இன்றும் திருப்பதி கோவிலின் கதவுகளில் இது போன்ற சிற்பங்களைக் காணலாம். திருப்பதி கோவிலின் எதிரே ஹாத்திராம் பாபாவின் மடம் உள்ளது. அங்கு அவர் ஜீவ ஸமாதியில் துயில் வீற்றியிருந்து, வரும் பக்தர்கள் அனைவருக்கும் அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார். ■

---

22-ம் பக்க தொடர்ச்சி

அடுத்து ''மோக ஞானா:'' என்கிறார். அதாவது, கோணல் அறிவு உடையவர்கள் எதையும் தர்க்க ரீதியாக ஆராய்ந்து பார்க்காமல் குதர்க்க ரீதியாக வாதிடுபவர்கள்; பொய்யை உண்மைபோல் பேசுபவர்கள்; அநியாயத்தை நியாயம் போல் கல்பித்து விடுவார்கள். இவர்கள் கேட்கும் கேள்விக்கு ஸரியான பதில் கூறிவிட்டாலும், அதை மனதில் வாங்கிக் கொள்ளாமல் மீண்டும் மீண்டும் அதே கேள்வியை கேட்பார்கள். காரணம் என்ன என்றால் உண்மையை அறிய வேண்டும் என்பது அவர்களுடைய எண்ணம் இல்லை. தான் எவ்வளவு ஸாமர்த்தியமாக கேள்வி கேட்டுவிட்டோம் என்பதை பறை சாற்றிக் கொள்ள வேண்டும் என்பதே இவர்கள் ஆசை. இவர்களும் ப்ரக்ருதிக்கு வசப்பட்டவர்கள்.

உலகத்தில் நடந்த விஷயங்களைத் தெரிந்து பெரியவர்கள் எடுத்து சொல்லக் கேட்டும், தானாகத் தெரிந்து கொண்டும், சிறிதும் விவேகமில்லாமல் நடந்து கொள்வார்கள். இவர்களுக்கு எவ்வளவு சொல்லியும் பயனில்லை. எல்லாம் தெரிந்தது போல் நடந்து கொள்வார்கள். ''விசேதஸா'' என்று குறிப்பிட்டு, இவர்களையும் ப்ரக்ருதிக்கு வசப்பட்டவர்களாக பகவான் குறிப்பிடுகிறார். இவர்கள் அனைவரும், மையல் ஊட்டுகின்ற ராக்ஷஸ, அஸுர இயல்பை அடைகின்றனர் என்றும் மேலும் பகவான் குறிப்பிடுகின்றார்.

(தொடரும்)

# பாலகர்களுக்கு ஒரு கதை - 9

ஒரு ஸமயம், மூன்று மனிதர்கள் ஸ்வர்க்கத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களில் முதலாமவன் பண்டிதன், இரண்டாமவன் புரோகிதன். மூன்றாமவன் உழவன். அவர்கள் மூன்று பேரும் ஸ்வர்க்கத்தின் உள்ளே நுழைய முயற்சித்தார்கள். அப்பொழுது வாயிற்காவலன் அவர்களைப் பார்த்து, ''நீங்கள் செய்த நற்காரியங்கள் யாவை? எதனால் உள்ளே நுழைய ஆசைப்படுகிறீர்கள்?'' என்றான்.


அப்பொழுது பண்டிதன் கூறினான். ''நான் அதிகம் படித்தவன். அனைத்து ஶாஸ்திரங்களும் என்னிடத்தில் இருக்கின்றன. அதனால் நான் ஸ்வர்க்கத்தில் நுழைய அதிகாரம் உடையவன்'' என்றான். அதைக் கேட்டு வாயிற்காவலன், ''நீ நிறையப் படித்து ஞானத்தை ஸம்பாதித்தது எல்லாம் ஸத்யம். ஆனால், படித்த ஒரு அம்சத்தைக் கூட வாழ்க்கையில் நீ கடைப்பிடிக்கவில்லை. அதனால் உனக்கு ஸ்வர்க்கத்தில் நுழைய அனுமதி இல்லை'' என்றான்.

அடுத்து புரோகிதன் கூறினான். ''நான் நிறைய யாக யஜ்ஞங்கள் செய்து புண்ணியம் ஸம்பாதித்திருக்கிறேன். அதனால் நான் ஸ்வர்க்கத்தில் நுழைய அருகதை உடையவன்'' என்றான். புரோகிதனையும் வாயிற்காவலன், ''நீ உன்னுடைய ஸுகத்திற்காகவும், க்ஷேமத்திற்காகவும் மட்டுமே யாக யஜ்ஞங்கள் பண்ணினாய். சுயநலக்காரனுக்கு ஸ்வர்க்கத்தில் நுழைய அனுமதி கிடையாது'' என்று கூறி நிராகரித்துவிட்டான்.

மூன்றாவதாகிய உழவன் கூறினான். ''நான் ஸாதாரண உழவன். நான் என்னுடைய வீட்டையும், வயல் வரப்பையும் சுற்றி பசியினாலும், தாகத்தினாலும் தவிக்கக்கூடிய வழிப்போக்கர்களுக்கு தண்ணீரும், ஆஹாரமும் மட்டும் தான் கொடுத்தவன். இது தான் நான் செய்த காரியம். நான் ஸ்வர்க்கத்தில் நுழைவதற்கு அருகதை உள்ளவன்தானா அல்லது அருகதை அற்றவனா என்று எனக்குத் தெரியாது'' என்றான்.

வாயிற்காவலன் உழவனைப் பார்த்து, ''நீ தான் ஸ்வர்க்கத்தில் நுழைய அருகதை உள்ளவன். ஏனென்றால் நீ உன்னை சுற்றியுள்ள ஜனங்களுடைய துக்கத்தைப் போக்குவதற்காக முயற்சிகள் செய்து உள்ளாய். ஶாஸ்த்ர அறிவினாலும், யாக யஜ்ஞாதிகளினாலும் ஸ்வர்க்கத்தை அடைய முடியாது.

மற்றவர்களுடைய துக்கத்தை நிவாரணம் பண்ணுவதால் மட்டுமே ஸ்வர்க்கம் கிடைக்கும்'' என்று கூறி அவனை ஸ்வர்க்கத்திற்குள் அனுப்பி வைத்தான்.



*"ஆத்மவத் ஏவ பரானபி பச்யத"* என்ற ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் வார்த்தைப்படி பகவானுடைய குழந்தைகளாகிய நாம் அனைவரும் ஸ்வயநலமாக இல்லாமல், பரோபகாரர்களாக அனைத்து மனிதர்களிடமும், வாயில்லாத உயிர்களிடமும் ஒரே ஒரு பரம்பொருள் தான் இருக்கிறது என்ற பாவனையுடன் நினைத்து அன்புடனும், ஆதரவுடனும், கருணையுடனும் பழக வேண்டும். இப்படி இருந்தோமானால் இந்த பாவனை என்றாவது ஒரு நாள் ஸத்யமாகி, குருவினுடைய க்ருபையாகிய படகினால் ஸத்யமான, நித்யமான ஸ்வரூபமாக நம்மை ஆக்கிவிடும். ■

## நாம ஸங்கீர்த்தனம்

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞையின் பேரில், ஒரு நாம ஸங்கீர்த்தன இளைஞர் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குழு, ஒவ்வொரு வீடாகச் சென்று "ஹரி நாம ஸங்கீர்த்தனம்" செய்ய சித்தமாக உள்ளது. இந்த நாம ஸங்கீர்த்தனத்தில்,

*"ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே"*

என்னும் கலியை நாசம் செய்ய வல்லமை படைத்த மந்த்ரத்தை இரண்டு மணி நேரம் தொடர்ந்து ஜபிக்கப்படும். இதை எல்லா ஞாயிற்றுக் கிழமைகள், மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களில் காலை 9 மணி முதல் 11 வரை அல்லது மாலை 3 மணி முதல் 5 மணி வரை நடத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இந்த நாம ஸங்கீர்த்தனத்திற்கு வரும் குழுவிற்காக எந்த விதமான கட்டணமும் இல்லை. பிரசாத விநியோகமோ, பணச் செலவோ கிடையாது. இதில் ஸ்த்ரீகள், புருஷர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம். அக்கம் பக்கத்து வீடுகளில் உள்ள தெரிந்தவர்களையும் கலந்து கொள்ளச் சொல்லலாம். இதனை ஏற்பாடு செய்தவர்களுக்கும் கலந்து கொண்டவர்களுக்கும் உள்ள எல்லா விதமான ப்ரச்சனைகளும் தீர்ந்து விடுவது ப்ரத்யக்ஷம்.

இந்த நாம ஸங்கீர்த்தனம், தங்கள் வீடுகளில் செய்ய விருப்பம் உள்ளவர்கள், தங்களின் பெயர், முழு விலாசம், நடத்த விருப்பமுள்ள தேதி, நேரம் (காலை அல்லது மாலை) என்கிற விபரங்களை முன் கூட்டியே கடிதம் எழுதி அதன் உறை மீது "நாம ஸங்கீர்த்தனம்" என்று எழுதி அனுப்பவும். கடிதம் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ளவும். தொலைபேசி மூலமாகவோ நேரிலோ ஸ்ரீ ஸ்வாமிகளை தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும்.

தபால் மூலம் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
**குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்**
"ப்ரேமிக பவனம்"
24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.

# திருஅரிமேய விண்ணகரம் -

மஹா ஸம்ப்ரோக்ஷணம் - ஜூலை 6, '98

திருஅரிமேயவிண்ணகரம், சீர்காழி அடுத்துள்ள, திருநாங்கூர் க்ஷேத்திரத்தில் உள்ள 11 திவ்யதேசங்களில் முக்கியமானதாகும். நம்முடைய ஸ்வாமிகளின் முயற்சியால் 6-7-98 அன்று இத்திருக்கோவிலுக்கு மஹாஸம்ப்ரோக்ஷணம் நடைபெற உள்ளது. இந்த திவ்யதேசம், சீர்காழியில் இருந்து 6 கி.மீ. தூரத்தில் உள்ளது. இந்த திவ்யதேசத்தில் குடமாடும்கூத்தர் மூலவராக, ஸ்ரீதேவி, பூதேவி தாயார்களுடன் எழுந்தருளி இருக்கிறார். உத்ஸவர், சதுர்புஜகோபாலன் ஸ்ரீதேவி, பூதேவியுடன் எழுந்தருளியிருக்கிறார்.

அமிர்தகடவல்லி தாயாருக்கு தனிச்சந்நிதி உள்ளது. க்ஷேத்திரத்தின் தீர்த்தம்-அமிர்ததீர்த்தம், விமானம்-உச்சச்ருங்க விமானமாகும். பெருமாள் உத்தங்க முனிவரின் தபஸிற்கு ப்ரத்யக்ஷமாகியிருக்கிறார்.

இந்த க்ஷேத்ரத்தின் மஹிமை, பத்மபுராணத்தில் பாலசவன மஹாத்மியத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த க்ஷேத்ரத்தை அமேயதேவ நகரம் என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. இதுவே நாளடைவில், அரிமேய விண்ணகரம் என்று மருவியிருக்கிறது. இந்த க்ஷேத்திரத்தின் மஹிமையை முப்பத்துமுக்கோடி தேவர்களும் அறிய ஒண்ணாதமையால் இதற்கு அமேயதேவநகரம் என்று காரணப் பெயர் ஏற்பட்டதை அகஸ்திய மாமுனிவர், ராஜா உபரிசரவஸுக்கு விவரிக்கிறார். வேதவ்யாஸர், இந்த க்ஷேத்ரத்தை கடஸ்தானம் என்று அழைக்கிறார்.

இந்த க்ஷேத்திரத்தைப் பற்றிய ஒரு புராண கதை பின்வருமாறு உள்ளது. ஒரு ஸமயம், கருடனின் தாயாரான வினதைக்கும், ஸர்ப்பங்களின் தாயாரான கத்ருவிற்கும் இடையே சர்ச்சை ஏற்பட்டது. இந்திரலோகத்தில் உள்ள வெள்ளை குதிரையின் வாலின் நிறம் வெள்ளையா, கருப்பா என்பதே அது. வினதை வெள்ளை என்றும், கத்ரு கருப்பு என்றும் வாதிட்டனர்.

மறுநாள் காலையில், இந்திரலோகத்தில் சென்று அந்த குதிரையை பார்த்து வர தீர்மானித்திருந்தனர். பிறகு கத்ரு, தனது பிள்ளைகளான க்ருஷ்ண ஸர்ப்பங்களை, அந்த குதிரையின் வாலைச் சுற்றியிருக்குமாறு சொன்னாள். அந்த ஸர்ப்பங்களும் அவ்வண்ணமே செய்தன. மறுநாள், குதிரையின் வால் கத்ருவின் சூழ்ச்சியால் கருப்பாகத் தெரிந்தது.

இதனால் ஒப்பந்தப்படி வினதை அடிமையானாள். தன்னுடைய அடிமைத்தளையிலிருந்து விடுபடவேண்டுமானால் அமிர்தத்தை கொணர்ந்து தர வேண்டும் என்று கத்ரு நிர்ப்பந்தித்தாள்.

தனது தாயாரான வினதையின் நிலைமையை உணர்ந்த கருடன், அமிர்தத்தை ஒரு குடத்தில் வைத்து தேவலோகத்திலிருந்து கொணர்ந்தார். வரும் வழியில் கருடனை தேவர்கள் பின் தொடர்ந்தனர். அவர்களுள் ஒருவரான மாயாவி என்பவர் கருடனிடமிருந்து அமிர்தத்தை அபகரித்தார். அப்பொழுது ஸ்ரியபதியான பகவான் ஸ்ரீவிஷ்ணு, மாயாவி மீது அம்பு எய்ய, அந்த அமிர்தகுடமானது பூமியில் விழுந்தது. அந்த அமிர்தகுடம் விழுந்த இடமே அமிர்ததீர்த்த புஷ்கரணி ஆகும். இதனால், இங்கு வீற்றிருக்கும் பெருமாளுக்கு குடமாடும்கூத்தர் என்று பெயர் ஏற்பட்டது.

இந்த திவ்யதேசத்தை திருமங்கை ஆழ்வார் தனது பத்து பாசுரங்களால் மங்களாஸாசனம் செய்துள்ளார்.


## அறிவிப்பு

ஸ்ரீ ஹரி :

**குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்**, சென்னை - 600 083

### மதுரமுரளி வருடசந்தா

''மதுரமுரளி'' க்கான வருடசந்தா ஜூன் '98 இதழுடன் முடிவடைந்துள்ளது.

அநேக சந்தாதாரர்கள் இன்னமும் தங்கள் சந்தாவை செலுத்த முன் வரவில்லை. அவர்களுக்கு இது விஷயமாக தனியாக தொடர்பு கொள்வது என்பது சிரமமான ஒன்றாகும். ஆகவே, சந்தா செலுத்த வேண்டியவர்கள் ***"குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்"*** என்னும் பெயரில் மட்டுமே ரொக்கம் / M.O. / காசோலை / DDயாக ரூ. 60/-ஐ தங்கள் பெயர், முகவரி, சந்தா எண், தொலைபேசி எண் உள்ளிட்ட விவரங்களுடன் உடனே அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி :

மதுரமுரளி,

திரு. V. சங்கரன்,

5 / 3, MIG Flats, பி.டி. ராஜன் சாலை,

கே.கே. நகர், சென்னை - 600 078.

Phone No : 484 0527

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 35

*கேளாதளிக்கும் உன் கேடில் புகழைக்*
*கேடு செய்யாது அருள் அருணாசலா- 22* (தொடர்ச்சி)

பகவான், நாம் கேட்காமலேயே க்ருபை செய்யக் கூடியவன். நம்முடைய தேவைகளை நாம் சொல்லாமலேயே புரிந்து கொண்டு க்ருபை செய்யக் கூடியவன். நமக்கு எதற்கெல்லாம் தேவை ஏற்படுமோ அதற்கெல்லாம், முன்பே அறிந்து க்ருபை செய்யக் கூடியவன். பலருக்கு தங்களுக்கு என்ன தேவை என்பதில் தீர்மானம் இல்லை. நாம் நமக்கு தேவை என்று நினைப்பது, உண்மையில் தேவையில்லாமல்கூட போகலாம். அவ்வாறு அது தேவையில்லாமல் போவது மட்டுமல்லாமல், சில ஸமயங்களில் விபரீத பலன்களையும் விளைவிக்கலாம்.

நமக்கு இன்று சரியாகப்படுவது, நாளை தவறாக முடியலாம். இன்று ப்ரதிகூலமாக தெரியும் விஷயம், நாளை அனுகூலமாக முடியலாம். நாம் ஒன்று நினைக்க இறைவன் ஒன்று நினைத்துவிட்டானே என்று பலர் கூறுவதை பார்க்கலாம். நாம் நினைப்பதைவிட இறைவன் நினைப்பதுதான் சரியாக இருக்கும் என்பதை பலர் புரிந்து கொள்வதில்லை. உலகத்தில் ஒவ்வொரு விஷயமும் இறைவன் ஸங்கல்பத்தின்படிதான் நடக்கின்றன.

ஒரு ஸமயம், திருவண்ணாமலையில் பகவானின் ஜீவித காலத்தில், ஆச்ரமத்தில் ஒரு கட்டிட வேலை நடந்து வந்தது. அந்த விஷயத்தில் இரு ஸாரார்களிடையே அதை எப்படி வடிவமைப்பது என்று சர்ச்சை ஏற்பட்டது. பகவான் அப்பொழுதும் மௌனமாக இருந்தார். அதை கவனித்த சிலர், பகவானை அணுகி, இது விஷயமாக தாங்கள் ஏதாவது அபிப்ராயம் சொல்ல வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு பகவான், இந்த ஆச்ரமத்தில் கட்டிடம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று இறைவன் ஏற்கனவே தீர்மானித்திருக்கிறான். அதன்படிதான் இந்த கட்டிடம் வரப்போகின்றது. வீணாக நமக்குள் சர்ச்சை செய்வதில் ஒரு ப்ரயோஜனமும் கிடையாது என்று சொன்னார். லோக விஷயங்களுக்குத்தான் ப்ராரப்தம் உண்டு. •பகவத் விஷயங்களுக்கு ப்ராரப்தம் கிடையாது என்பதால், பகவத் விஷயமாகவே ப்ரார்த்தனை செய்ய வேண்டும் என்பதுதான் வேதாந்திகளின் அபிப்ராயம்.

பக்தர்கள் பகவானிடத்தில் கொண்டுள்ள உறவு, ஒரு குழந்தை தாயாரிடத்தில் கொண்டுள்ள உறவு போல் ஆகும். ஆகையால் தனக்கு மனதில் என்னவெல்லாம் தோன்றுகின்றதோ அதை இறைவனிடத்தில் தெரிவிப்பதில் தவறு ஒன்றும் இல்லை என்பது பக்தர்கள் அபிப்ராயம். அப்படி பக்தர்களும் இறைவனிடம் ''நான் ப்ரார்த்திப்பதினால் அவற்றை கொடுத்துவிடாதே, நான் ப்ரார்த்திப்பது சரியாக இருந்தால் மட்டுமே எனக்கு கொடுக்க வேண்டும்'' என்கிறார்கள். இதையே ஆண்டாளும் திருப்பாவையில், ***"யாம் வந்த காரியம் ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய்"*** என்று ப்ரார்த்திக்கிறாள். அதாவது, நான் ப்ரார்த்திக்கும் விஷயம் அனுகூலமானதா, ப்ரதிகூலமானதா என்று ஆராய்ந்து, அது அனுகூலமாக இருந்தால் மட்டும் அனுக்ரஹம் செய் என்கிறாள்.

ஒரு குழந்தை இரவெல்லாம் ஜலதோஷத்தினாலும் ஜுரத்தினாலும் ஶ்ரமப்பட்டு பரிதவிக்கும். மறு நாள் காலையில் தனக்கு Ice cream வாங்கித் தரும்படி தாயாரிடம் அடம்பிடித்து அழும். எத்தனை அடம் பிடித்தாலும் தாயார் வாங்கிக் கொடுக்க மாட்டாள். அதே ஸமயம், அந்த குழந்தை பக்கத்து வீட்டில் விளையாடச் செல்லும். அங்கு அவர்கள் Ice cream சாப்பிடுவதைப் பார்த்துவிட்டு தனக்கும் கேட்கும். அவர்கள் உடனே வாங்கிக் கொடுத்துவிடுவார்கள். இந்த குழந்தைக்கு தன்னுடைய தாயாரைக் காட்டிலும் பக்கத்து வீட்டில் உள்ளவர்கள், தன்னிடம் அதிகம் ப்ரியம் வைத்துள்ளதாகத் தோன்றும். அது போல், விவேகம் இல்லாதவர்கள், தான் ப்ரார்த்திப்பது நடக்கவில்லையென்றால் இறைவனுக்கு கருணையில்லை என்று நினைக்கிறார்கள்.

தான் ப்ரார்த்திப்பது நடக்கும்பொழுதுதான் இறைவன் இருக்கின்றான் என்றும், தான் ப்ரார்த்திப்பது நடக்கவில்லையென்றால் இறைவனுடைய இருப்பையே (இறைவன் இருப்பதையே) ஸந்தேஹப்படுகிறார்கள். ஒருவன், இறைவன் இல்லை என்று கூறுவது, நாக்கினால் பேசிக் கொண்டே நாக்கு இல்லை என்று கூறுவது போலாகும். இறைவனுடைய சக்தியினாலேயே ஸர்வ அங்கமும் இயங்குகின்றது. இறைவனுடைய சக்தியினால் இயங்கக் கூடிய நாம் இறைவன் இல்லை என்று கூறுவது மிகவும் விசித்ரமாகும். முட்டையிலிருந்து கோழி வந்ததா? அல்லது கோழியிலிருந்து முட்டை வந்ததா என்ற கேள்விக்கு பதில் என்றும் கிடையாது. முட்டையையும் கோழியையும் படைத்தவன் இறைவன் ஒருவன் இருக்க வேண்டும்.

இறைவனை நேரில் பார்த்தால்தான் ஏற்றுக் கொள்வேன் என்பது சரியான வாதம் ஆகாது.

(தொடரும்)

# செய்திகள்

### ஜூன் 3-ந் தேதி முதல் 9-ந் தேதி வரை

பெங்களூர், மல்லேஸ்வரம், ஸ்ரீ காஞ்சி காமகோடி ஶங்கர மடத்தில், ஸ்ரீ காஞ்சி ஆசார்யாள் ஜயந்தி ஸபா டிரஸ்ட் சார்பில், ஸ்ரீ ஸ்ரீ மஹாபெரியவாளின் 105-வது ஜயந்தியை ஒட்டி நடைபெற்ற *''ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ ஸத்க்ருது''* மஹோத்ஸவத்தில் நம் ஸ்வாமிகள் கலந்து கொண்டார்கள்.

### ஜூன் 21-ந் தேதி

Devotees Sava Trust ஸார்பில் மயிலை P.K. ஹாலில் நடைபெற்ற ஸ்ரீ மஹாபெரியவாளின் ஜயந்தி மஹோத்ஸவ விழாவில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொண்டார்கள்.

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

### ஜூலை 6-ந் தேதி

சீர்காழி அருகிலுள்ள திருநாங்கூரில், திரு *அரிமேய விண்ணகரம்* (குடமாடு கூத்தர்) *கோவில் மஹாஸம்ப்ரோக்ஷணத்தில்* ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொள்கிறார்கள்.

### ஆகஸ்ட் 6-ந் தேதி முதல் 9-ந் தேதி வரை

சென்னை, கோபாலபுரம், ஸ்ரீ க்ருஷ்ணன் கோவிலில் நம் ஸ்வாமிகள் 'பக்த சரித்ரம்' பற்றி ப்ரவசனம் செய்கின்றார்கள்.

### ஆகஸ்ட் 16-ந் தேதி

மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின் ஐந்தாம் ஆண்டு ப்ரஹ்மோத்ஸவம், மலைப்பட்டு ''மதுரபுரி'' ஆஶ்ரமத்தில் ஆரம்பம்.

**மங்களானி பவந்து**

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registrar of Newspapers for India
R. No. 62828/95

Regd. No. TN/MS(S)/714/98/
WPP No. TN/MS(S)/54/98

| | | |
|---|---|---|
| வேணு:3 | ஜூலை 1998 | கானம்:12 |



Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar